..... யாவரும் கேளீரென.....!

புரட்டாதி 98 : முகிழ் 02

*வில்லினை யெடடா! கையில்*
*வில்லினை எடடா! அந்த*
*புல்லியர் கூட்டத்தைப்....*
*பூழ்தி செய்திட்டா.*



## நுழைவாயில்

வேண்டுமொரு புதிய சிந்தனையும் மாற்றுத்தலைமையும்
*-ஆசிரியர் குரல்*

**கவிதை**

தளிர் *-தேன்மொழி*
புதுவகை உதிரம் *-அன்தீபன்*
சும்மாயிருக்க *-பிரமபுத்திரன்*
மொழியாக்கம் *-ஷமீர்-அல்-காசிம்*

**கட்டுரை**

மலையக பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை *-எஸ்.பிரபா*
மாணவரை பண்ட சரக்காக்கிவரும் டியூட்டரிகள் *-எம்.ஆசாத்*
வன்முறைகளின் அரசியல்
*-பிரமபுத்திரன்*

**கதை**

வார்த்தை *-ச.தமிழ்ச்செல்வன்*

**அயல்**

இரத்தினபுரியிலிருந்து ஒரு மனித நேயனின் குரல். . . .

**முன்னட்டை**

வன்முறைகளுக்கு பலியான ஒரு

---

**தொடர்புக்கு**

**திரு.அ.கனகராஜா**
**எலிப்படை மே.பி,**
**பொகவந்தலாவ.**

## வேண்டுமொரு புதிய சிந்தனையும் மாற்றுத்தலைமையும்

மலையகம் முன்னொருபோதும் இல்லாத அரசியல், பொருளாதார, பண்பாட்டு நெருக்கடியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

அரச இயந்திரம் இராணுவ மயமாகிவரும் ஒரு காலகட்டத்தில் உலகவங்கியும், பண்ணாட்டு நிதி நிறுவனமும் மூன்றாம் உலகை கொடிய நிபந்தனைகளுக்கு உற்பத்தி அமெரிக்க ஏகாபத்தியத்தின் காலடியில் மண்டியிட வைக்க முயன்று வரும் தருவாயில்
நீண்டகால குத்தகையில் தனியார் முகாமை கம்பனிகளிடம் கொடுக்கப்பட்ட தோட்டங்களில் தொழிலாளர்கள் படுகின்ற துயரங்கள் சொல்லில் அடங்காதவை. நீண்டுவரும் யுத்தம் மலையகத்தமிழரையும் பலமுனைகளில் சீண்டிவருகின்றது. நாம் பார்வையாளர்களாக உள்ளபோதிலும் கூட யுத்த குற்றவாளிகள்போல் நடத்தப்படுகின்றோம்.

மொழி கலாசார மேலாதிக்கம் போக்குவரத்துத்துறை முதல் முழுப்பொதுத்துறையையும் மேலாண்மை கொண்டுவருகின்றது. இளைஞர் சமுதாயம் வழியேதென்றறியாமல் மது, மாது, களியாட்டங்களில் கட்டற்ற வாழ்வை தனிதாக்கிக்கொண்டு தவிக்கின்றது.

இந்த நெருக்கடிகளை வெளிக்காட்டும் மிக அண்மைக்கால எடுத்துக்காட்டாக இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்ற இனவெறியாட்டமும், பசறை தோட்டத்தொழிலாளர்களின் வீரம் விளைந்த போராட்டமும் ஆகும்.

இந்த நெருக்கடியிலிருந்து விடுபட்டு ஒரு புதிய விடியலை நோக்கி வீறுநடைபோட இங்கே புதிய சிந்தனையும், மாற்றுத்தலைமையும் அவசியமாகும்.

மலையகம் சூழ்கொள்ளும் வரலாற்று நெருக்கடிகளை எதிர்கொள்ள எமது நாடோடிகள் ஒரு துளி பங்களிப்பை வழங்குமென நம்புகின்றோம்.

*-ஆசிரியர் குழு-*

# மலையக பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள்

இயற்கை உலகை ஆளத்தொடங்கிய யுகம்தொட்டு இன்ரநெட் யுகம்வரை பெண் என்னும் பதம் அதன் இருத்தலியல் உரிமை தொடர்பான ஆயிரம், ஆயிரம் பிரச்சினைகளுக்கும் அதற்கும் தெளிவான நிறுவனமயமான சர்வாதிகரத்தனமான வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றில் இலக்கிய வழிப்படுத்திலில் கூட தவறவிடப்பட்ட தெளிவான அம்சமாக பாலியல் வன்முறை இனம்காணப்பட்டுள்ளது. இது சித்தாந்த ரீதியாக சார்பியல் இல்லாமல் அதனை வரையறுக்க முற்படும்போது பெண் சரிநிகர் சமானம் உடைய உயிரிற்கு எதிரான பாலியல் ரீதியான சுரண்டல்கள், அவள் விருப்பத்திற்கு மாறான தொழில்களில் ஈடுபடுத்தப்படுவது என மிகத்தெளிவான விளக்கத்தை அளிக்கலாம். ஆனால் இது யாரிடமிருந்து வழங்கப்படுகிறது இதன் பிறப்பிடம் எது என்பதெல்லாம், சூழலுக்கேற்றவாறு காணப்படுகின்றன.

ஒரு வகையில் இது இடர்மிகுந்த சூழ்நியில் ஆயுதமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இதை உலகப்பொதுப்பிரச்சினையாக எதிர்கொள்ளும் அதேவேளை மரணித்துப்போன யுகங்களில் மரத்துப்போன உணர்வுகளோடு உலாவிக் கொண்டிருக்கும் நம் மலையகத்திலும், உணரக்கூடியதாக இருக்கின்றது. இந்த குறிஞ்சி நில மக்களிடையே பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை பின்வரும் மாதிரிக்களங்களில் அவதானிக்கலாம்.

1. தொழில்புரியும் பெண்தொழிலாளர்கள் தம்மேலதிகாரிகளால் வன்முறைக்குள்ளாக்கப்படுவது.
2. மாணவிகளும், ஆசிரியைகளும் பாடசாலை ஆசிரியர்களாலும், உயர்வகுப்பு மாணவர்களாலும் துன்புறுத்தப்படுவது.
3. மலையத்திலிருந்து நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்லும் பெண்களும், சிறுமிகளும் தொழில்ரீதியாக பாலியல்ரீதியாக துன்புறுத்தப்படுவது.
4. சந்தேக நபர்கள் என்ற பெயர்களில் கைதுசெய்யப்படும் பெண்கள் விசாரணைகளின் போதும், சிறைக்கூடங்களிலும் வன்முறைக்குள்ளாக்கப்படுவது.
5. பொது இடங்களிலும், பயண நேரங்களிலும் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுதல்.
6. மொழிப்பிரயோக கலாசாரத்திலும், மதக்கலாசாரத்திலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள்.

தேயிலைக்கொழுந்தின் இலையையும், திரியையும் நம்பி தன்வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கும் மலையகபெண்தொழிலாளர்கள் வரலாற்றுக்காலம்தொட்டு கங்காணிமார்களாலும், வெளிகள உத்தியொத்தர்களாலும் கிண்டல்கள், வசமொழிகள், அங்கங்கள் பற்றிய அருவறுப்பான விமர்சனங்கள், உடல்ரீதியான வன்முறைகள் என்பனவற்றின் மூலம் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். வழிவழியாக வெற்றிலையும், கோட்டும் அணிந்து திரியும் கங்காணிமார் விடுகின்ற சேட்டைகள் கூடிநிற்கும் அதிகாரிகளாலும், அலுவலகர்களாலும் ஊக்கப்படுத்தப்படுவதோடு அதுவே அவர்களின் தனித்திறமைகளாக ஆகி நிற்பதையும் காண்கின்றோம். வார்த்தைகளோடு சரசமாடுவதோடு நின்றுவிடாமல் சந்தர்ப்பச்சாட்டில் அங்கங்களை உரசுவது சிலவேளைகளில் பின்கதவு வழியாக அவர்களின் அறையில் அணைப்புகளுக்காக செல்வது என்பனவற்றை பெண்கள் தமது விதியாகவே எண்ணியிருக்கும்காலம் மாய்ந்துபோனபோதும் அதன் எச்சங்களை இன்னும்காணக்கூடியதாக இருக்கின்றது.

சமூகத்திலிருந்து நம்பிக்கைக்குரிய வர்க்கமாக திகழுவது பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களுமாவர். இங்கு இடம்பெறும் சேட்டைகளை பலவாராக வகைப்படுத்தலாம். நிறுவனத்தலைவர்கள் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி வார்தை மூலமோ, சரசமாகவோ ஆசிரியையிடமோ மாணவியிடமோ அருவறுக்கத்தக்க முறையில் நடந்து கொள்கின்றனர். வளபற்றாக்குறையையும் மீறி தனியாக அமைந்துள்ள ஆசிரியர்விடுதிகள், காரியாலயங்கள், ஆய்வுசாலைகள் ஆகிய இடங்களில் இவ்வாறான சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. எல்லோராலும் என்றும் கண்டிக்கப்படுகின்ற விடயமாக இது காணப்படுகின்றபோதும் ஆசிரியர்கள் ஆணாதிக்க தலைமையுடன் மாணவிகளிடம் சேட்டைவிடுவது இன்னும் பல உயர் பாடசாலைகளில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. இவர்கள் தன்னுடைய பார்வைகளால் பெண்களின் அங்கங்களை அருவறுப்பாக விமர்சித்தல் இலக்கியங்களில்

பெண்கதாபாத்திரங்களை காமவெறிக்கொப்பளிக்க அளவுக்குமீறிய அழுத்தும்கொடுத்து வர்ணிப்பதன் மூலமும் ஆசிரியர் மாணவர் என்ற உயர்ந்த தொடர்பிற்கு முரணாக நடந்துகொள்ள முற்படுவது, பெண்களின் இயற்கை நிகழ்வான மாதவிடாய் போன்றவற்றை பிற்போக்குத்தனமாக முறையில் கொச்சைப்படுத்துவது என்பன மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன. மாணவிகளின் சிறிய சுகவீன விடுமுறையையும் அசிங்கமாண முறையில் கேள்விக்குள்ளாக்குவதும் இதில் அடங்கும். வகுப்பறையில் நடைபெறும் இந்த சேட்டைகள் அம்பலத்துக்கு வரும்போது அவரது பதவி, படிப்பு, கௌரவம் என்ற கோதாவில் ஆணாதிக்கத் திமிர்த்தனமிக்க நிர்வாக அமைப்புகளால் மூடிமறைக்கப்படுகின்றன.

உயர்பாடசாலைகளில், சிலஉயர்வகுப்பு மாணர்வர்கள் மாணவிகளை நடத்தும் விதம் மிகவும் அருவருப்பானது. அவளின் பின்புறத்தில் தட்டி உள்ளாடை அணிந்திருக்கின்றாளா என்பதை சோதிக்கும் அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கின்றது. சகமாணவிகளை மட்டுமல்லாது இளம் ஆசிரியைகளுக்கு கிண்டல் செய்வது, கொச்சைத்தன்மையாக விமர்சிப்பது என்பதை யெல்லாம் எழுதுகின்றபோது கையோடு மனதும் வலிக்கின்றது.

பாடசாலை மாணவிகள், ஆசிரியைகள் பயண நேரங்களில் பேரூந்து நடத்துனர்களாலும், சாரதிகளாலும் பாலியல் இம்சைக்குள்ளாக்கப் படுகின்றனர். அங்கங்களை அதிகம் உரசிப்பார்க்கும் மகா அதிஷ்டசாலிகளான இவர்களிடமிருந்து தப்பிக்கொண்ட பெண்களை இலங்கையின் எந்த மூலையிலும் காணமுடியாத அளவுக்கு இவர்களது லீலைகள் தலைவிரித்தாடுகின்றன.

மலையக பெண்கள் மத்தியிலிருந்து வெளிநாட்டுப் பணிப்பெண்களாக செல்வோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இவர்கள் தங்களது குடும்பங்களில் வறுமையை போக்கவென அனுப்பப்பட்ட பணம்பண்ணும் இயந்திரங்களாகவே கருதப்படுகின்றனர். இவர்கள் செல்லும் வீதிகளில் எஜமானர்களின் வயிற்றுப்பசிக்கு அன்னமிட்டாலும் உடல்பசிக்கு முந்தானை விரிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்ற சம்பவங்கள் குறித்து நாளாந்தம் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதனை எதிர்த்தால் பிணமாக நாடு திரும்பவோ அல்லது ஒரு அகதியாக வீடு திரும்பவோ தள்ளப்படுகின்றனர். இவ்வாறு வருகின்ற பிணங்களின் தொகை திகைக்குமளவுக்கு அதிகரித்துள்ள அதேவேளை நகரமயமாக்களின் விளைவாக கூலிப்படையாக இளம்பெண்களின் பட்டாளம் நகரங்களுக்குச் சென்று வீட்டுவேலையாட்களாகவோ ஆடைதொழிற் சாலைகளில் கூலித்தொழிலாளர்களாகவோ தொழில் பார்க்கின்றபோது சகஊழியர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், கட்டாக்காளி இளைஞர்களாலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சட்டவிரோத கருச்சிதைவுகளும், மரணங்களும் இளம்பெண்கள் காணாமல் போதலும் வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்படுவதும் குறித்த செய்திகள் நாளாந்தம் வந்துகொண்டேயிருக்கின்றன.

இவ் அவலங்களுக்கு எவ்வகையிலும் சளைக்காத வகையில் சொந்த வீடுகளிலேயே பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ள ஒரு நிலையை காணக்கூடியதாக உள்ளது. கணவன் மனைவியை அடித்தல், அவளது விருப்பத்துக்குமாறாக பாலுறவுகொள்ளல், தந்தையால் மகள்மார் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படல் பாட்டன் பேத்திமாருடன் பாலியல் வல்லுறவுகொள்ளல், நெருங்கிய உறவினர்கள் அயலவர்களால் பெண்களும் சிறுமிகளும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படல் என்பனவற்றை அசட்டை செய்யமுடியாது.

இன்றைய யுத்த சூழலின் காரணமாக ஏதேச்சையாக கைதுசெய்யப்படும் பெண்கள் விசாரணைகளின் போதும், தடுப்புக்காவலின் போதும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவது எழுதாத சட்டமாக இருந்துவருகிறது.

வறுமை, வேலையின்மை, குடும்பசூழ்நிலைகளின் காரணமாக பாலியல் தொழில் நடத்துகின்ற கூட்டமொன்றையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. கணவன்மாரின் பதவியுயர்வுகளுக்காக உயரதிகாரிகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் பெண்கள், நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து பாலியல் தொழிலாளர்களாக மாற்றப்படும் பெண்கள் ஆகியோர் பலவந்தப்படுத்தப்பட்டிருப்பதில்லை

.....தொடர்ச்சி 5ம் பக்கம்

# சூளுரை

என் காணியின் கடைசித்துண்டையும் பறித்தெடு
என் இளமையைச் சிறைக்கூட்டினுள்ளே புதைத்திடு
என் முது சொத்தை கொள்ளையடி
என் கோப்பைகளில் உன் நாய்களுக்கு இரைபோடு
போ. . . என் ஊரிலுள்ள கூரைகளின் மீது
உன் பயங்கரவலைகளை விரித்திடு
மனிதனின் எதிரியே. . .

நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்,
இறுதிவரை போராடுவேன்

என் கண்ணெதிரே
நீ எல்லா விளக்குகளையும் ஊதி அணைத்தாலும்
உதடுகளின் முத்தங்கள் அனைத்தையும்
உறைவித்தாலும்,
என் நாட்டின் காற்றினைச்
சாபங்களால் நிறைத்தாலும்
என் ஓலமிடும் குரல்வளைகளை
அமுக்கி ஓடுக்கினாலும்,

என்காசு போல் பொய்காசு தயாரித்தாலும்
என் பிள்ளைகளின் முகத்து முறுவலைப்
பிடுங்கி எடுத்தாலும்
இகழ்ச்சி ஆணிகொண்டு
என் விழிகளில் அறைந்தாலும்
மனிதனின் எதிரியே
நான்விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரைப் போராடுவேன்

மனிதனின் எதிரியே
துறைமுகங்களின் சைகைகள் உயர்த்தப்பட்டுவிட்டன
காற்றெங்கும் அழைப்புக்கள் நிரம்பிவிட்டன
எங்கெங்கும் அவை தெரிகின்றன
அடிவானத்தில் கப்பற் பாய்களை காண்கின்றேன்
முயன்று, இடர்மீறி இழப்பு கடலினின்றும்
யுலிசர்சின் கப்பல்கள் மீண்டும் வருகின்றன

பொழுது புலர்கிறது, மனிதன் முன்னேறுகின்றான்
அவன் பொருட்டாக நான் சத்தியம் பண்ணுவேன்
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்ஷ!
போராடுவேன்!

*சமீர் அல் காசீம்*
*பாலஸ்தீன கவிஞன்*
*மொழியாக்கம்*

4ம் பக்கத்தொடர்ச்சி..........

என்றபோதிலும் இந்த சுரண்டல்கள் அவர்கள் மீது திணிக்கப்பட்டதேயாகும்.

வீதிச்சிறுமிகள், தெருவில்வாழும் பெண்கள், நாடோடிப்பெண்கள் ஆகியோர் தெருப் போக்கர்களால் துன்புறுத்தப்படுவது பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுவது சமூகத்தின் கண்களில் விழுவதாக இல்லை.

காதல் என்ற போர்வையில் பெண்களை ஏமாற்றி உடலாலும், உள்ளத்தாலும் வன்முறைக்குள்ளாக்கியும், மனைவிகளின் சகோதரிகள், நண்பர்களின் மனைவிகள் என்போரையும் ஏமாற்றி வன்முறைக்குள்ளாக்கும் போக்கும் எம்மத்தியில் கேட்பாரின்றி தொடர்கின்றது.

இவ்வன்முறைகளில் பின்னணியில் வறுமையும், ஆணாதிக்க அரசியலும் கோலோச்சுகின்றது. தொழில் நேரங்களிலும், பாடசாலைகளிலும் நடைபெறும் இவ்வன்முறைகளுக்கு தெளிவான பின்புலமாக ஆணாதிக்க முதலாளித்துவ அரசியல் சிந்தனை இருந்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. குடும்பங்களில் நிலவுகின்ற வன்முறைகளுக்கு ஆணாதிக்கமுதலாளித்து அரசியலோடு எமது மரபுகளும், நம்பிக்கைகளும், கலாசாரமும் காரணமாக இருக்கின்றது.

இவ்வரசியல் பிரசவித்த தவிர்க்கமுடியாத விளைவுகளில் ஒன்றான வறுமைகாரணமாக பாலியல் வன்முறைகளுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கப்படும் பெண்கள் சிறுமிகள் ஆகியோரை பாதுகாக்கும் பொறுப்பும் இவ்வன் முறைகளுக்கெதிராக அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்துகளை பாராமல் நடவடிக்கை எடுப்பதற்கும் எமது சமூகம் முன்வர வேண்டும்.

வரலாறு ஒருபோதும் பின்நோக்கி நகர்வதில்லையே மலையக பாட்டாளி வர்க்கம் ஒடுக்குமுறைக்குள்ளாகும் பெண்களும், ஒரு நாள் எழுந்தே தீருவர். ஒரே இரத்தம் தன் இரத்தத்திடம் தாய்ப்பால் குடிக்கும்போதே பெண்ணுறுப்பை கள்ளத்தனமாக ரசிக்கும் பண்பு போகும்வரை எமது நிகழ்ச்சித்திட்டத்தில் பெண்விடுதலைக்கும், ஆணாதிக்கம் முதலாளித்துவ அரசியலை உடைத்தெரியவும் ஒரு தீர்க்கமான இடத்தை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

*எஸ்.பிரபா*

# வன்முறைகளின் அரசியலும் மலையக தமிழரின் எதிர்காலமும்

-கார்வண்ணன்-

மலையகத் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. நாட்டின் யுத்தம் முனைப்புகளால் தமிழர்கள் இரண்டாம் தரப்பிரசைகளாக்கப்பட்டு, அன்னியரைப்போல விரட்டப்படும் நியைில், நாட்டில் சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகள் மிகப்பலம் மிக்க நிறுவனங்களாக வளர்ந்துவருகின்ன. சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தாக்குவது, தீமூட்டுவது, கொலைசெய்வது என வன்முறைக்கலாசாரத்தின் பலிப்பீடத்தில் தமிழ்மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மலையகத்தமிழர்களுக்கெதிரான பேரினவாத முனைப்புகள் மேலெழுப்படும் போதெல்லாம். நாம் அதிகமாவே அதற்கு விடுதலைகொடுத்திருக்கிறோம். இந்நூற்றாண்டின் முன்னரைப் பகுதிகளில் மேற்கிளம்பிய பேரினவாத சகதிகளினால் பிரசரிவுரிமை, வாக்குரிமை என்பனவற்றை இழந்த தோடல்லாமல், துறைமுகம், புகையிரதச்சேவை, போக்குவரத்துச்சேவை, ஆஞ்சல்சேவை என்பவனற்றில் இருந்த மலையக தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களை மலையத்தில் மேற்கொண்டு வந்த பேரினவாத அரசாங்கங்கள் படிப்படியாக மலையக தமிழர்வாழும் பிரதேசங்களை ஒரு குடியேற்ற முற்றுகை நிலைக்கு உள்ளாக்கியுள்ளன. நிலத்தொடர்ச்சியும், சமூக தொடர்ச்சியும் சிதைக்கப்பட்ட நிலையில் இனவெறியூட்டப்பட்ட பெரும்பான்மை மக்களால் சூழப்பட்டுள்ள மலையக தமிழ்மக்கள் தாம் 200 ஆண்டுகளாக வளப்படுத்தி வாழ்ந்துவரும் மண்ணிலேயே அந்நியராய், அடிமைகளால், நடத்தப்பட்டுவருகின்றனர்.

மலையக தமிழருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நன்கு திட்டமிடப்பட்ட இனவெறியாட்டங்கள் மூலம் 1948 முதல் இன்றுவரை படிப்படியாக நூற்றுக்கணக்கான நகரங்களையும், தோட்டங்களையும் விட்டு விரட்டப்பட்டுள்ளனர். படிப்படியாக இடைவெளி விட்டுவிட்டு மேற்கொள்ளப்பட்டுவந்த ஆக்கிரமிப்பு அழித்தொழிப்பு நடவடிக்கைகள் 78, 79, 81, 83, 90 காலப்பகுதியில் பெருமளவில் நன்குதிட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.

1983 ஆம் ஆண்டின் புகைமண்டிய, வரலாற்றில் கரைபடிந்த வன்முறைகளால் வெட்கித்தலைகுனிந்த பேரினவாதம் அதனை எதிர்கொண்டு மாபெரும் தேசியவிடுதலைப் போராட்டம் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படப்போகும் பல்வேறு பரிமாணங்களில் தன்னைப்பலப்படுத்திக்கொண்டு முன்னேறிவந்துள்ளது.

வரலாற்று கரைகள் அகற்றவென, பிரசாவுரிமை சட்டத்திருத்தம் தேர்தல் சடட திருத்தம், அரசகரும் மொழிச்சட்டம் என அழகான, ஆடம்பரமான ஏற்பாடுகளும், அறிவித்தல்களும் வெளியிடப்பட்ட போதும் இன்னும் 500000 ற்கும் மேற்பட்ட மலையகத்தமிழர் அரசியல் அனாதைகளாகவே உள்ளனர். அவர்களது வாக்குரிமையோ, பிரசாவுரிமையோ வழங்கப்படவில்லை. அரச பதவிகளுக்கு பதிவு பிரஜையா? வம்சாவளி பிரஜையா? என வினாவுதல் இன்னும் தொடர்கிறது.

ஆளும் பொதுசன முன்னணி அரசாங்கம் பதவியேற்றுது முதல் 60 க்கும் மேற்பட்ட

தாக்குதல் சம்பவங்கள் மலையக தமிழருக்கெதிரான வன்முறை நடைபெற்றுள்ளன. காலி, களுத்துரை, கண்டி, மாத்தளை, பதுளை, நுவரெலியா போன்ற இடங்களில் நடைபெற்றுவந்த இனவெறியாட்டங்கள் கடந்தமாதம் இரத்தினபுரி தோட்டங்களில் நடந்தது அதன் ஒரு பரிமாணத்தைக் காட்டிநிற்கின்றது.

1983ற்குப்பின்னர் பெருமெடுப்பிலான வன்முறைகள் நடைபெறவில்லைதான் ஆனால் அதன் பொருள் மலையகத்தமிழருக்கு எதிரலான வன்முறைகள் ஓய்ந்தன என்பதல்ல மாறாக விட்டுவிட்டு இன்று சிறிதாக தொடர்ந்த வண்ணமேயுள்ளன. 1986ம் ஆண்டு மலையக தேசிய எழுச்சியானபொது மாபெரும் எதிர்தாக்குதல் நடத்தப்பட்டதன் விளைவாக திகைப்புள்ள பேரினவாத சக்திகள் தம்மை சிறிது சிறிதாக பலப்படுத்திக்கொண்டு அதிகார தரப்பினதும், பாதுகாப்பு புலனாய்வு பிரிவுகளும் பேராதவுடன் “சிங்கள வீரவிதான இயக்கம்” என்ற அமைப்பின் கீழ் அணிதிரண்டுள்ளதோடு மலையத்தமிழருக்கு பிரசாவுரிமை, வாக்குரிமை, வீட்டுரிமை வழங்குவது சிங்களமக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம் என புலம்பத்தொடங்கியுள்ளன. 200 ஆண்டுகளின் பின்பும் மலையக தமிழர் அன்னியர் அடிமைக்கூலிகள் என்ற உணர்வே பேரினவாத சக்திகளிடையே ஆட்சியாளரிடமும் மேலோங்கி நிற்கின்றது.

இந்த இக்கட்டான தருணத்தில் இந்த வன்முறைகளின் ஆரசியலை புரிந்து கொள்வதும், அதனை எதிர்கொள்வதும் தவிர்க்கமுடியாததுமாகும்.

இந்த வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் நேரடியான, வன்முறையுற்பட, பொலிஸ், போக்குவரத்துத்துறை, சுகாதாரதுறை, நிர்வாகதுறை என அனைத்து துறைகளிலும் வியாபித்து இருக்கின்றனர். இந்த பின்னணியில் பேரினவாத அரசியல் சித்தாந்த மான “சிங்கள - பௌத்த இனவெறித்தீவிரவாதம்” இருக்கிறது இதற்கு இந்த நாட்டின் வரலாறே அடிமைப்பட்டுக்கிடக்கிறது. இரண்டு நிலப்பிரபுக்களுக்கு இடையிலான எல்லாளன் - துட்டகைமுனு போர் ஒரு இனப்போராக சித்தரிக்கப்படுவதில் கூட இந்த மேலாதிக்க திட்டமிடப்பட்ட விதம் புலப்படுகின்றது. இந்தவன்முறைகள்,

- திட்டமிட்ட குடியேற்றங்கள்
- பொலிஸ், நீதிமன்ற பாரபட்சங்கள்
- தமிழ்மொழியில் கடமைபுரிய மறுத்தல்
- போக்குவரத்து சேவைகயிலான இனவெறி
- சுகாதார சேவையிலான இனவெறி
- கல்வி சேவையிலான இனவெறி
- திட்டமிட்ட வன்முறைத்தாக்குதல்கள்
- திட்டமிட்ட பாலியல் வல்லுறவுகள்
- திட்டமிட்ட மக்கள்தொகை கட்டுப்பாடுகள்
- தோட்டநிர்வாகங்களை பேரினவாதமயமாக்கல்
- தோட்டத்தில் பெரும்பான்மையின் மேலாதிக்க நிலைப்பாடுகள்

என பல்முனை பரிமாணங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

மலையக தமிழரை அரசியல் அனாதைகளாக்கி பொருளாதார அடிமை தளத்தில வைத்துக்கொண்டு, பண்பாட்டு அடையாளங்கள் அழிந்து பெரும் அடிமை குடிகளாக

நடத்த விரும்புகின்ற பேரினவாத மற்றும் முதலாளித்துவ சக்திகளின் அரசியல் இதுதான்.

தோட்டங்களை சூழ கிராமங்களை அமைப்பது, பின்னர் அதனை விரிவாக்க முனைவது, தோட்டத்தொழிலாளர்கள் எதிர்த்தால் அவர்களுக்கு எதிராக பெரும்பான்மை மக்களை தூண்டிவிடுவது என்பன பிற்போக்கு அரசியல் சக்திகளின் அரசியலாக இருந்து வருகிறது. கம்பனி நிர்வாகங்கள் சம்பளவுயர்வு கேட்கும்போது கூட தோட்டமக்கள் கிராமக்களைவிட நல்ல வாழ்நிலையில் இருக்கிறார்கள் என அரசியல் பேசுகின்றன.

“பசறை தோட்டத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது இரத்தினபுரியில் நடைபெற்ற அதே கெதி உங்களுக்கும் நடக்கும்” என, தோட்ட நிர்வாகம் மிரட்டியுள்ளது. இதன் அரசியல் அடித்துப்பணியவைப்பதுதானே? இரத்தினபுரி மாவட்டத்தின் வேவல்வத்தையிலும் சூழவுள்ள 50 கிலோமீற்றர் சுற்றவட்டார தோட்டங்களிலும் நடந்த வன்முறை வெறியாட்டத்தின் பின்னணியில் ஆளுங்கட்சி அரசியல்வாதியான பவித்ரா வன்னியராச்சி, தர்மதாச வன்னியராச்சி, பந்துல கரவிட்ட போன்றோர் முக்கிய உந்து சக்தியாக இருந்துள்ளனர். இவர்கள் தமது அரசியலை தக்க வைப்பதற்கும், பெரும்பான்மை மக்களும் அவர்களை வறுமை, வேலையின்மை, நிலைமைகளின் ஏற்றத்தாழ்வுகளுக்கு அயலில் உள்ள தமிழரே காரணம் என சாட்டிவிட்டு குருட்டுதனமாக யுத்தத்தில வளங்களை விரயமாக்கி வருவதை மூடிமறைக்கவும், ஏகாதிபக்க சக்திகளிடமும் பண்ணாட்டு நிறுவனங்களிடமும் நாட்டை விற்பதை மறைக்கவும் முயல்கின்றனர்.

வரலாற்று ரீதியாக பெரும்பான்மை மக்களிடம் ஊட்டப்பட்டுள்ள இனவெறியோடு அன்றாட அரசியல் அவர்களை தமிழருக்கெதிராக செயற்பட தூண்டுகின்றது. மீண்டும் மீண்டும் அடிபட்டு தமிழர்கள் ஓடுகின்றபோது, அந்த இடங்களை பெரும்பான்மை மக்களுக்கு பகிர்ந்தளிப்போம் மலையகத்தமிழரின் உழைப்பை சுரண்டவும் அவர்களை பொருளாதார அடிமைகளாக்கிக்கொள்ளவும் தனியுடமைத் தோட்டச்சொந்தக்காரரின் மலிவான கூலி உழைப்பாளர்களாக வேலைசெய்ய இரத்தினபுரி மாவட்ட தமிழரை நிர்ப்பந்திக்கவே திட்டமிட்டவன்முறை நடத்தப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் கூட மலையக்பிரதிநிதிகள் அவசரகாலச்சட்டத்தையும் வங்குரோத்து வரவுசெலவுத்திட்டத்தையும், ஆதரித்து நிற்பது கேள்விக்குரியதாகும்.

இந்த வன்முறையின் அரசியலை புரிந்துகொண்டு அதனை எதிர்கொண்டு போராட மக்கள் தயாராக வேண்டும்.

வேவல்வத்தைக்கு ஆயிரத்துக்கும்மேற்பட்ட குண்டர்கள் திரண்டுவர வாகனங்கள், வெடிகுண்டுகள், பெற்றோல் என்பவனவற்றை விநியோகத்தவர்களை அரசு சுதந்திரமாக உலாவவிட்டு இருப்பது அதன் அரசியல் குறித்து மேலும் விழிப்புணர்வோடு இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

**பழிக்குப்பழி**

மெல்லத் தேய்த்தால்
சாகும் மூட்டையை
அழுத்தித் தேய்த்து
ஆத்திரம் தீர்த்தேன்

-சி.சத்திய மூர்த்தி-
நன்றி : ஞானரதம்



# புது வகை உதிரம்

அன்று நஞ்சூட்டபட்ட
யப்பான்
கிரோசீமா, நாகசாகியில்
இன்றும் இளந்தளிர்களை
காணோம்
பிரசவிக்கும் ஜீவன்களும்
அங்கமிலந்த விநோத உடைகள்
இது வேண்டாம்!
வேண்டாம் - எமக்கு......

இருபதாம் நூற்றாண்டு வரை
மலையக மண்ணில்
தெளிக்கின்ற
பேரின - நஞ்சு மருந்து
இருபதியோராம் நூற்றாண்டுகளில்
மைந்தர்களின் உடலிலோடும்
"P" எனும் உதிரவகை

அம்மா!
இந்த வகை உதிரத்திலதான்
மீண்டும் நான் பிறப்பேன்


இனவாத வஞ்சகத்தையழிக்க
செந்தாரகையாக
மலர்வேன்

பேரின பீடையை அழிக்க
பெரும் பாட்டாளி
படைநடத்த பிறப்பேன்

பிரசவித்த அம்மாவோ
அடையாளம் காணவேண்டுமா?

என்னை - அந்த
பச்சை மலையடிவாரத்தில்
திரு நீலகண்டரை போல்
நீல குழந்தையாய்
தவழ்வேன்... தவழ்வேன்

மறந்தேதும்
நீல குழந்தை என
என்னை அழைத்து விடாதே...
அம்மா!



— அன் தீபன் —

# "இரத்தினபுரி வன்முறைச் சம்பவங்களின் பின்

"இரத்தினபுரி, வேவல்வத்தை, அளுப்பொலைதோட்டங்களில் இடம்பெற்ற மோசமான வேதனைக் குரிய நிகழ்வுகள் சம்பந்தமாக மிகைப்படுத்தப்பட்ட காட்சிகளும் செய்திகளுமே முழு நாட்டிலும் பரவி இருக்கின்றன என்பதை அந்த வன்முறை நிகழ்வுகள் சம்பந்தமாக வெளியான செய்திகளிலிருந்து நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே இந்த இனவாத வன்முறை வெறியாட்டத்தின் பின்னணியிலே புதைந்துள்ள நிகழ்வுகளைப் பற்றிய சத்தியமான செய்திகளை எழுதி மக்கள் முன் உண்மையை எடுத்து வைப்பது, குறிப்பிட்ட பிரதேசத்திலே வாழ்பவன் என்ற வகையிலே எனது கடமையும் பொறுப்புமாகும் என்றே கருதுகிறேன்."

1998ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் திகதி தமிழ் தொழிலாளர்களின் குடியிருப்புகளான லயம் அறைகளுக்குப் பக்கத்தில் இரண்டு சிங்களவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுக்கிடந்த சம்பவத்தினைத் தொடர்ந்து கொழுந்து விட்டெரிந்த இனவாத வன்முறைத் தீ, இறுதியிலே 800க்கும் மேற்பட்ட லயம் அறைகளை சாம்பலாக்கிய சம்பவத்தோடு சற்றே ஒய்ந்திருக்கிறது.

குறிப்பிட்ட இரு சிங்களவர்களும் கொல்லப்படுவதற்கான காரணங்கள் இவைதான் என்று பொலிஸாரும் பொதுத் தகவல் ஊடகங்களும் தெரிவித்த கருத்துக்கள் உண்மைக்கு மாறானதும், பரஸ்பர நம்பகத்தன்மை அற்றதாகவும் உள்ளன என்பதை குறிப்பிட வேண்டியிருக்கிறது. பெண்கள் கற்பழிப்பு விவகாரம் தான் புகைச்சலை உண்டாக்கிவிட்டதாக சிலர் கூற, (கசிப்பு) கள்ளச்சாராய பிரச்சினையே கலவரத்துக்கு காரணம் என்று மற்றொரு சாரார் கூறியிருந்தனர்.

இந்தவன்முறைச் சம்பவத்திற்கு மூலகாரணமாக இந்த இரண்டு சம்பவங்களில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என கூறினாலும் இந்த சம்பவத்தின் பின்னணியிலே புதைந்துள்ள உண்மைகள் இவற்றிற்கெல்லாம் நேர்மாறானவையாகவே உள்ளன என்பதையும் கூற வேண்டியுள்ளது. ஆகவே இந்த சம்பவம் பற்றிய உண்மைகள் ஆராயப்படாமல் வெளியிடப்படுகின்ற கருத்துக்கள் அனைத்துமே ஒவ்வொருவரினதும் மேலோட்டமான கருத்துக்களேயாகும். இரத்தினபுரி தொடக்கம் பலாங்கொடை வரை நீண்டபெரும் பாதையோடு இணைந்ததாக அமைந்துள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளாக அமைந்துள்ள மேற்குறித்த லயம் அறைகள் அனைத்தும் தேயிலைத் தோட்டங்களை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்டவையாகும்.

வெள்ளையரான ஏகாதிபத்தியவாதிகள் மூலமாக, தோட்டங்களில் வேலை வாங்குவதற்காக தென் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த தமிழ்த் தொழிலாளர்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் வழங்கப்படாதவர்களாக, உரிமைகள் மறுக்கப்பட்ட ஊமை ஜீவன்களாக பல சகாப்தங்கள் தமது உழைப்பினை மாத்திரமல்ல தங்களது உயிர்களைக் கூட இந்த மண்ணை செழிப்படையச் செய்வதற்காக அர்ப்பணம் செய்திருக்கிறார்கள்; அதுவும் மற்றவர்களின் உயர்வுக்காகவும் அடுத்தவர்களின் இலாப வசதிகளுக்காகவுமே ஆகும். அதுமட்டுமல்ல இந்த உழைப்பிற்காக அநேகமாக அவர்கள் பெற்றுக்கொண்டது ஊதியத்தினை விடவும் அதிகமான வசதிபடைத்த வலியவர்களின் வசைமொழிகளேயாகும்.

எமக்கு நினைவு தெரிந்த காலம் தொட்டு இந்த தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையினை உற்று நோக்கியதிலிருந்து அவர்களது வாழ்க்கை அன்றுமுதல் இன்று வரையிலே ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குட்பட்ட கதையாகவே தொடர்ந்து இருந்து வருவதை நாமறிவோம். அவர்களின் அனைத்துக் காரியங்களிலும் நிறைவேற்றுத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அந்தந்த தோட்டத்துறை அதிகாரிகளின் கைகளிலேயே தங்கி இருக்கிறது.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட தேயிலைத் தோட்டங்களுக்குள் இருந்து வெளியுலகுக்கு வந்துவிட்டால் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு அடிபணிந்தே அவர்கள் வாழ வேண்டியுள்ளது. சிங்களவர்களின் அனுமதியின்றி கிராமங்களுக்குள் நுழைந்து தொழில் பார்க்கவோ விறகுத் துண்டுகள் சேகரிக்கவோ அவர்களுக்கு சுதந்திர உரிமை கிடையாது. பொது பஸ் வண்டிகளில் கூட மற்றைய மக்களைப் போல தைரியமாக, உரிமையோடு தமது பிரயாணத்தை மேற்கொள்ளும் வாய்ப்புக்கூட அந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது.

தமக்கு என்ன அநீதிகள் செய்யப்பட்டாலும் அதை அவர்கள் பொறுமையோடு தாங்கிக் கொள்ள வேண்டுமெயொழிய ஏதும் பேசிவிடக்கூடாது. தவறியேனும் அந்த நிகழ்ந்த அநீதிக்காக குரல் கொடுத்து ஏதாவது பேசிவிட்டால்போதும், அப்புறம் அடி வாங்குவது நிச்சயமாகிவிடும். இப்படியான தாக்குதல் சம்பவங்கள் வாரத்தில் ஒரிரு தடவைகளேனும் இடம்பெற்றே வந்துள்ளன. அதுமட்டுமன்றி சில தோட்டப் பெண்களைக் கற்பழிப்பது, தோட்ட மக்களின் பொருள்களை சூறையாடுவது, தோட்டப் பெண்களை மானபங்கப்படுத்துவது போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாகவே இடம் பெற்று வந்திருக்கின்றன. இப்படியான அநீதிகளுக்காக அந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் நியாயம் தேடி பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்வது கூட அரிதாக இருந்து வருகிறது. பொலிஸாரின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை மூலமாக தமக்கு நீதி கிடைக்காது என்ற உண்மையினை அந்த மக்கள் அறிந்து வைத்திருப்பதும் அதற்கு ஒரு காரணமாகும்.

இப்படியான எல்லாவித அடக்குமுறைகளையும் வெறியாட்டங்களையும் பொறுமையோடு சகித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் பல தலைமுறைகள் அமைதியோடு இந்த மண்ணுக்குள் சங்கமமாகிவிட்டார்கள். ஆனால் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த தோட்டத் தொழிலாளரின் புதிய தலைமுறை, இனிமேலும் இந்த அடக்கு முறைகளையோ, தமது பரம்பரைத் தலைவிதியையோ ஜீரணித்து ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ தயாராக இல்லை என்பதையே அவர்களது மேற்குறித்த எதிர்நடவடிக்கை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

வேவெல்வத்தை அளுப்பொலை தோட்டத்தில் இரு சிங்களவர் கொல்லப்பட்டதை வெறும் கள்ளச்சாராய விவகாரத்தால் உருவானதென தீர்மானித்து விட முடியாது. நீண்ட காலமாக அழுகி சீழ் கட்டி ரணமாகி இருந்த காயத்திலிருந்து இப்பொழுதுதான் வெடித்து சலம் வெளியேறி இருக்கிறது என்றுதான் கூறவேண்டியுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பந்துசேன என்பவரைப்பற்றி தமிழர்கள் மத்தியில் மாத்திரமல்ல சிங்களவர்களுக்கிடையில் கூட அதிருப்தியான நிலையே இருந்து வந்திருக்கிறது. கள்ளச்சாராய விவகாரத்தோடு பல கற்பழிப்பு விவகாரங்களிலும் அவர் சம்பந்தப்பட்டவர் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற கொலைச்சம்பவம் பற்றி நீதியான விசாரணை நடைபெற வேண்டுமென்பதே அனைவரினதும் கருத்தாகும். ஆனால் விசாரணை இடம் பெறுவதில் வேண்டுமென்றே தாமதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேசத்தின் செல்வாக்குமிக்க அரசியல்வாதி ஒருவர் இந்த விவகாரத்திலே தனது செல்வாக்கினைப் பாவித்து அழகாக காரியமாற்றி இருக்கிறார் என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது கொலைச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் லொறிகளில் வந்திறங்கிய 200க்கும் மேற்பட்ட சிங்கள இனவாதக் குண்டர்கள் 50 பேர் கொண்ட கோஷ்டிகளாக பிரிந்து லயம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து அங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் மூர்க்கத்தனமாக தாக்கி விரட்டி அடித்து விட்டு எல்லா லயம் அறைகளுக்கும் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் தீவைத்து கொளுத்தியிருக்கிறார்கள்.

அளுப்பொல தோட்டத்திலிருந்து அக்ரஸ்லான்ட், வெல்லாவெல ராஸ்ஸகல வரையில் உள்ள லயங்கள் அனைத்துமே தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழ் மக்கள் தங்களது உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அருகில் உள்ள காடுகளுக்குள் புகுந்திருக்கிறார்கள். தெருவிலே வாகனங்களை நிறுத்தி தமிழர்கள் கீழே இறக்கப்பட்டு தாக்கப்பட்டதன் காரணமாக வீதியால் நடந்து தப்பியோடவும் முடியாத நிலை. கிராமங்களுக்குள் குறுக்கு வழிகளில் வெளியேறவும் முடியவில்லை. எந்தவித [illegible] வசதிகளும் அவர்களுக்கு கிடையாது. [illegible]வேதான் உயிர் தப்புவதற்காக வனாந்தரத்திற்குள் நுழைந்திருக்கிறார்

# றைச் சம்பவங்களின் பின்னணியில் புதைந்துள்ள காரணிகள் என்ன?’’

காரணமாகும்.

இப்படியான எல்லாவித அடக்குமுறைகளையும் வெறியாட்டங்களையும் பொறுமையோடு சகித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் பல தலைமுறைகள் அமைதியோடு இந்த மண்ணுக்குள் சங்கமமாகிவிட்டார்கள். ஆனால் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த தோட்டத் தொழிலாளரின் புதிய தலைமுறை, இனிமேலும் இந்த அடக்கு முறைகளையோ, தமது பரம்பரைத் தலைவிதியையோ ஜீரணித்து ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ தயாராக இல்லை என்பதையே அவர்களது மேற்குறித்த எதிர்நடவடிக்கை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

வேவெல்வத்தை அளுப்பொலை தோட்டத்தில் இரு சிங்களவர் கொல்லப்பட்டதை வெறும் கள்ளச்சாராய விவகாரத்தால் உருவானதென தீர்மானித்து விட முடியாது. நீண்ட காலமாக அழுகி சீழ் கட்டி ரணமாகி இருந்த காயத்திலிருந்து இப்பொழுதுதான் வெடித்து சலம் வெளியேறி இருக்கிறது என்றுதான் கூறவேண்டியுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பந்துசேன என்பவரைப்பற்றி தமிழர்கள் மத்தியில் மாத்திரமல்ல சிங்களவர்களுக்கிடையில் கூட அதிருப்தியான நிலையே இருந்து வந்திருக்கிறது. கள்ளச்சாராய விவகாரத்தோடு பல கற்பழிப்பு விவகாரங்களிலும் அவர் சம்பந்தப்பட்டவர் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற கொலைச்சம்பவம் பற்றி நீதியான விசாரணை நடைபெற வேண்டுமென்பதே அனைவரினதும் கருத்தாகும். ஆனால் விசாரணை இடம் பெறுவதில் வேண்டுமென்றே தாமதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேசத்தின் செல்வாக்குமிக்க அரசியல்வாதி ஒருவர் இந்த விவகாரத்திலே தனது செல்வாக்கினைப் பாவித்து அழகாக காரியமாற்றி இருக்கிறார் என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது கொலைச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் லொறிகளில் வந்திறங்கிய 200க்கும் மேற்பட்ட சிங்கள இனவாதக் குண்டர்கள் 50 பேர் கொண்ட கோஷ்டிகளாக பிரிந்து லயம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து அங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் மூர்க்கத்தனமாக தாக்கி விரட்டி அடித்து விட்டு எல்லா லயம் அறைகளுக்கும் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் தீவைத்து கொளுத்தியிருக்கிறார்கள்.

அளுப்பொல தோட்டத்திலிருந்து அக்ரஸ் லான்ட், வெல்லாவெல ராஸ்ஸகல வரையில் உள்ள லயங்கள் அனைத்துமே தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழ் மக்கள் தங்களது உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அருகில் உள்ள காடுகளுக்குள் புகுந்திருக்கிறார்கள். தெருவிலே வாகனங்களை நிறுத்தி தமிழர்கள் கீழே இறக்கப்பட்டு தாக்கப்பட்டதன் காரணமாக வீதியால் நடந்து தப்பியோடவும் முடியாத நிலை. கிராமங்களுக்குள் குறுக்கு வழிகளில் வெளியேறவும் முடியவில்லை. எந்தவித ...கள வசதிகளும் அவர்களுக்கு கிடையாது. ...வேதான் உயிர் தப்புவதற்காக வனாந்தரத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள் அந்த அப்பாவி மக்கள். இப்படியான மரண பயத்திலே காடுகளுக்குள் புகுந்த பலர் இன்னமும் திரும்பி வரவில்லை என்ற செய்திகள் ஒருபுறமிருக்க, எந்தவித உணவோ, பானமோ இன்றி மரண பயத்தோடு காடுகளுக்குள் காலத்தைக் கழித்த அநேகமான சிறுவர்கள், குழந்தைகள் இன்று நோய்வாய்ப்பட்டு நடைப்பிணங்களாக திரும்பி வந்திருக்கிறார்கள்.

தோட்டப்புறத் தமிழ் மக்கள் இவ்வளவு இன்னல்களையும் அடைவதற்கு காரணமாக அமைந்திருப்பது அவர்கள் தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே காரணம்தான். அளுப்பொலை தோட்டலயம்களை தாக்கி தீயிட்டுக் கொளுத்திய சிங்கள இனவாதிகள் அங்கிருந்த ஒரே ஒரு கடையினை மாத்திரம் எதுவுமே செய்யாமல் மிகுதி வைத்திருக்கிறார்கள். தேடிப் பார்த்ததில் அது ஒரு சிங்களக் குடிமகனுக்கு சொந்தமான கடையென்றும் தெரியவந்திருக்கிறது. திட்டமிட்டே நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மாலை 5 மணிக்கும், 7 மணிக்கும் இடையில் நடத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதல் முறைகள் அனைத்துத் தோட்டங்களிலும் கிட்டத்தட்ட ஒரே பாணியிலேயே இடம் பெற்றிருக்கிறது. இனவாதக் கும்பலொன்று தோட்டக் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்த முற்படுவதாகவும் பாதுகாப்புத் தருமாறும் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் சில இடங்களுக்கு ஏனோ தானோ என்ற வகையிலே தாமதமாகவே பொலிஸார் வந்திருக்கிறார்கள்.

பின்னர் அங்கு வந்து சேர்ந்த இராணுவத்தினரே நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தாக்குதலில் சம்பந்தப்பட்டு அடையாளம் காணப்பட்ட பல சிங்களவர்கள் பற்றி தகவல் கொடுத்தும் அவர்களை சட்டப்படி கைது செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளத் தவறிய பொலிஸார், இரண்டு சிங்களவர்களைக் கொன்றதாக சந்தேகத்தின் பேரில் 14 தமிழர்களை உடனடியாக கைது செய்திருக்கிறார்கள். தீவைப்பு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட வெறியர்கள் குறிப்பிட்ட ஒரு 'பெரிய' புள்ளியின் ஆட்கள் என்ற ஒரே காரணத்தினால் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் தயங்குவதாகக் கூறப்படுகிறது. அரசியல்வாதிகள் தமது செல்வாக்கினையும் அரசியல் அதிகாரத்தினையும் பயன்படுத்தி சிங்கள இனவாதிகளைத் தூண்டிவிட்டு தமிழ் மக்கள் மீது அநியாயமான தாக்குதல்களைத் தொடுத்த சம்பவங்கள் பல கடந்த காலங்களிலே நிகழ்ந்திருப்பது யாவரும் அறிந்த விடயமேயாகும்.

சம்பவம் நடந்து முடிந்த பிறகு சாம்பல் மேடுகளாகக் காட்சியளித்ததோட்டக் குடியிருப்புகளையும், அகதிகளாக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் நிலையினையும் பார்வையிடுவதற்காக வருகை தந்த பெரிய 'புள்ளி' ஒருவர் எரிந்து நாசமாகியிருந்த குடிசைகளைப் பார்த்து ''இந்த பழையலயம் அறைகளுக்கு தீயிட்டது அவ்வளவு பெரிய ஒரு விடயமாக எடுக்க முடியுமா?'' என்று கூறினாராம்.

மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பாக தகவற்துறை ஊடகங்களும் குறுகிய மனப்பான்மையோடு ஒருதலைப்பட்சமாகத்தான் செயற்பட்டிருக்கின்றன என்று கூறவேண்டும். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த தகவற்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் செய்திப்பத்திரிகை நிருபர்களுக்கும், அங்கு நின்ற பொலிஸார் தரும் தகவல்களைத் தவிர வேறு எந்த விபரங்களையும் அலசி ஆராய்ந்து உண்மை செய்திகளை தெரிந்து கொள்ளமுடியாமற் போனது துரதிருஷ்டம் என்றே கூறவேண்டும்.

குறிப்பிட்ட சம்பவம் பற்றி சிலபத்திரிகைகளில் திரித்துக் கூறப்பட்ட உண்மைக்கு மாற்றமான செய்திகளே பிரசுரமாகி இருந்தன. அரச தொலைக்காட்சி சேவையில் கூட பெயருக்கு எதையோ காட்டிவிட்டு, சிரித்த முகத்தோடு அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கும் அரசியல் முக்கியஸ்தர்களை படம் போட்டுக் காட்டினார்களே தவிர, எங்கு எரிந்து சாம்பல் மேடாகக் காட்சியளித்த எண்ணூறுக்கும் மேற்பட்ட குடிசைகள், லயம் அறைகள் அவர்க

நன்றி:- 'லக்பிம'

ளுடைய எந்த கமெராவுக்கும் தென்படவில்லை போல் தெரிகிறது.

ஆனால் மாறாக தமிழர்கள் சிங்கள கிராமத்திற்குள் புகுந்து இப்படியான வெளியாட்டங்களை ஆடி தீவைப்புச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தால் எமது தகவற்துறை சாதனங்களின் செயற்பாட்டினையும் மனித நேயத்தினையும் நன்கு காணக்கூடியதாக இருந்திருக்கும்.

இந்த இலங்கைத் திருநாட்டிலே, நேர்மையான மனிதர்களோ, பொதுக்கருத்துக்கொண்ட தகவற்தொடர்பு ஊடகங்களைச் சேர்ந்தவர்களோ, உண்மையாகவே மனித உரிமை பற்றி பேசுகின்றவர்களோ இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றிருந்தால், பொலிஸ் அதிகாரிகளைப் பின் தொடர்ந்து வராமல் தைரியமாக குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கு வாருங்கள். திறந்த வெளி சிறைச்சாலைகளுக்கு நிகரான இந்த தோட்ட லயம் குடியிருப்புகளிலே தமிழ் மக்கள் என்ன

சிங்கள மூலம்: ஆனந்த ரஞ்சித்
தமிழில்: எம்.ஸீ.மொஹமட் அலி

துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு அப்பொழுது தான் உங்களுக்கு ஏற்படும். அதுமட்டுமல்ல இந்தக் கொடூரமான வன்முறை இனவெறியாட்டத் தீவைப்புச் சம்பவத்தினால் இந்த தமிழ் மக்கள் பட்டுத்தீர்ந்த, படுகின்ற அவஸ்தைகள் கொடுமைகள், பட்டினியால், நோய் நொடிகளால் மாய்ந்து மடியும் தமிழ் குழந்தைகளின் விபரங்கள் என்பவற்றை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இல்லையேல் என்றாவது ஒரு நாள் 'அவர்கள் கொதித்தெழுந்து நாமும் உங்களைப் போன்ற மனித உயிர்கள்தான். எமக்கும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமை இருக்கிறது. இந்த உரிமையை எமக்குத் தாருங்கள் என்றும் கேட்டு போராடத்தான் போகிறார்கள்.

# தளிர்

நாங்கள்
மலையக மெனும்
கலையத்தின் மைந்தர்கள்!
விடியலுக்கு விடையெடுத்து
வினாதொடுக்கும் விழிகள்!


நாங்கள்.
நாடோடிகளாக்கப்பட்ட
பட்டத்தை அவிழ்த்து
பேரின வாதத்தை யழிக்கும்
பெருச்சாலிகள்!

அடிமை வாழ்வின்
அனர்த்தங்களின் மத்தியில்
அனாதைகள்! எனினும்!

நாங்கள்,
சுட்டெரிக்கும் அந்த
சூரியனின் தோழர்கள்!

நாங்கள்,
வாழ்வை
வளப்படுத்த வந்த
இன்றைய இளம்
தளிர்கள்!

**தேன்மொழி (செ.ஜெ.ப)**
**சாமிமலை.**
**19981026**



# சும்மாயிருக்க...,

சும்மாயிருக்க சுதந்திரம்
கேட்டால்
சோற்று குவளையை
பறித்தெறிகிற தேசமிது!

வயிற்றுப்பசிக்கு
வழி கேட்டால்
வாரி வீழ்த்தும்
வரலாரெமது....

சுதந்திரம் வேண்டாம்
சோறும் வேண்டாம்
வீடுகொடென்றால்
வீடழிப்பு நடத்துகிற
தேசமிது!

நாடு கேட்டோமா
நல்ல வீடு கேட்டோமா
சோறுதானே கேட்டோம்!
பேருக்கு
சுதந்திரம்
கேட்கவில்லை
தீமூட்ட வருகிற
தியாக மனம்
எங்கிருந்து வரு....!

*-பிரமபுத்திரன்-*

# வார்த்தை

அநேகமாய் எல்லாம் தயார் பண்ணியாச்சு. சோலையப்பனுக்கு ரொம்ப சந்தோஷமும் திருப்தியும், இருப்பதில் நல்லதாக - குண்டிக்கு நேரே கிழியாததாக - இரண்டு டவுசரும், எல்லாப் பித்தானும் இருக்கிற ஒரு சட்டையும் துவைத்து, மடித்து-மடிப்பு நல்லா விழுவதற்காக 'டிரங்க்' குப் பெட்டிக்கு அடியில் வைத்தாயிற்று. டிரைவர் மாமா வீட்டிலிருந்து ஒரு சின்ன பிளாஸ்டிக் பையும் வாங்கி வந்து தூசியெல்லாம் தட்டி ஈரத் துணியால் துடைத்து ஒட்டியிருந்த அழுக்கெல்லாம் நீக்கியாச்சு. இனி போவதற்கு முதல் நாள் இந்தப் பையைக் கொஞ்சம் எண்ணெயில் முக்கிய துணியால் துடைத்துவிட்டால் போதும். புதுசு மாதிரியாகி விடும்.

இதில் கொஞ்சம் அவனுக்கு மனக்குறைதான். தோளில் தொங்கப் போடுகிற மாதிரி பள பளன்னு ஒரு ஏர் பேக் டிரைவர் மாமா வீட்டில் இருக்கத்தான் செய்கிறது. தூசி படாமலிருக்க அதை துணியால் சுற்றி வீட்டில் குறுக்கு விட்டத்தில் ஒரு கம்பியில் தொங்கவிட்டுத்தான் வைத்திருக்கிறார். ஆனால் அதை அவர் தரவில்லை. இவன் கேட்டுக் கூடப் பார்த்துவிட்டான். "ச்சே அதத் தரப்படும்? இன்னைக்கு ஒனக்கு குடுத்தம்னா நாளைக்கு ஆள் ஆளுக்கு கேக்க ஆரம்பிச்சிருவாக. நீ சும்மா இதவே கொண்டுபோ.." என்று சொல்லி பரண் மேலே ஏறி தேடி எடுத்து இந்தப் பையை கொடுத்துவிட்டார். அதில் இவனுக்கு அவர் மேலே வருத்தம் தான். அவர் இந்தப் பையைக் கொடுத்ததும் அவனுக்கு லேசாய் அழுகை கூட வந்து விட்டது.

அப்புறம் ஒரு பழைய மண்டையடித் தைல பாட்டிலையும் கழுவித் துடைத்து துப்புரவு பண்ணி வைத்துக் கொண்டான். அது தேங்காய் எண்ணெய் கொண்டு போக. எண்ணெய் தேய்க்காவிட்டால் அவனுக்கு மேலெல்லாம் சொங்குவத்திப் போய் சொறி சொறியாய் தெரியும். அதுதான். கண்ணாடியும் சீப்பும், போகிற இடத்தில் இவனுக்கும் தருவதாக செவன்த் 'பி' மாரிச்சாமி உறுதியளித்திருக்கிறான். அது போதும். கணக்கு வாத்தியார் வீட்டுக்குப் போய் 'நியூஸ் பேப்பர்' மூன்று வாங்கி வந்துவிட்டான் - கட்டுச் சோறு கட்ட. ஆறு பொட்டணம் போடணுமே, ரெண்டு நாளைக்கில்ல வேணும்.

இந்தப்பை ஆறு பொட்டணமும் சட்டை, டவுசரும் வைக்கப் போதுமா என்றொரு சந்தேகம் இவனுக்கு வந்து கொண்டேயிருந்தது. பத்துத்தடவையாவது ஆத்தாளிடம் கேட்டிருப்பான். அவளென்னமோ கொஞ்சங்கூட சந்தேகமேயில்லாமல் "ஏ...யப்பா...இதுல வைக்கலாமே எம்புட்டுச் சாமான்"என்று ரொம்ப உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்போது நாலைந்து தரமாக, காலேஜ் படித்துவிட்டு சும்மாயிருக்கிற முருகேச அண்ணன் வீட்டுக்கு நடையாக நடந்து கொண்டிருந்தான். அந்த அண்ணனிடம் 'கூலிங் கிளாஸ்' இருக்கு. அதுக்காகத்தான். தாரேன்னுதான் சொல்லியிருக்கு. இருந்தாலும் கையிலே வாங்குகிற வரைக்கும் மனசு நிக்குமா. இந்தத் தடவை "ஏய்-சத்தியமா தாரேம்ப்பா - போற அன்னைக்கு காலையிலேயே வேணுமின்னாலும் வாங்கிக்கோ" என்று இவன் தலையிலே அடித்துச் சொல்லிவிட்டதும் ரொம்ப திருப்தியுடன் திரும்பினான் சோலை. முருகேச அண்ணன் ரொம்ப நல்ல குணம். அவனுக்கு அப்பப்போ இங்கிலீஷ், கணக்கு சொல்லித் தருவதும் அதுதான். அதுகிட்ட படிக்கிறதுனாலே தான் இப்ப இவன் ஒவ்வொரு மாசமும் எல்லாப் பாடத்திலேயும் பாஸ் பண்ணி விடுவதோடு ஆறு அல்லது ஏழாவது ரேங்க்கிலேயே இருந்து கொண்டுமிருக்கிறான். ரொம்ப முக்கியமாக அந்த குருஜநாதனை 'பீட்' பண்ணிவிட்டான்.

டவுனில் தீப்பெட்டி வேலைக்குப் போன பிள்ளைகளை திருப்பிக் கொண்டு வந்து விடுகிற 'தீப்பெட்டி ஆபிஸ் கார்' வருகிற வரைக்கும் சிம்னி விளக்கின் முன்னால் காலை மடித்து

வாகாய் உட்கார்ந்து கொண்டு தெருப்பூரா கேட்கும்படியாக சத்தம் போட்டு ஒவ்வொரு பாடமாக படிக்கிற அவனுடைய குரல் இன்றைக்குக் கேட்கவில்லை. புஸ்தகம் விரித்திருக்க பார்வை அதில் நிலைத்திருக்க நினைவுமட்டும் எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் புத்தகத்தை மூடிவிட்டு விளக்கையும் அணைத்துவிட்டு வெளித் திண்டில் காற்றாட படுத்திருந்த அய்யாவோடு சேர்ந்து ஒட்டிப் படுத்துக் கொண்டான். ஆனால் தூக்கமும் வரவில்லை.

"கன்னியாகுமரியிலே வேறே என்ன சார் இருக்கு-"

"காந்தி மண்டபம் இருக்கு. அதுமேலே ஏறி நின்று பாத்தா மூணு கடலும் சங்கமமாகிறது தெரியும். மண்டபத்துக்குள்ளே காந்தி நின்ன இடம் ஒரு பீடம் மாதிரி இருக்கும். காந்தி ஜெயந்தியன்னிக்கு மாத்திரம் அதுமேலே சூர்ய ஒளி விழுகும்"

"அதெப்பிடி சார் அன்னிக்கு மட்டும் விழுகும்"

"அது அப்பிடித்தாம்லே மூதி...சரி சரி பாடத்தக் கவனி. மிச்சமெல்லாம் நாளைக்கி."

சோலையப்பன் கண்களைத் திறந்தபடியே கனவு கண்டு கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் ஒரு வாரமாக இதே பேச்சுதான். பள்ளிக்கூடத்தில் மட்டுமில்லை. ஊருக்கு வந்தும் பலபேரிடம் பலமுறை திரும்பத் திரும்ப இதே பேச்சுதான். கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கொல்லம், புனலூர், குற்றாலம் என்று.

இன்னும் ஒரே ஒரு நாள் தான் இடையில் இருக்கிறது யப்பா! நினைத்தாலே சோலைக்கு 'எப்படியோ' இருந்தது. நாளைக்கழிச்சு இந்நேரம் உல்லாசப்பயணம். நாளைக்கழிச்சு சாயந்தரமே சாப்பிட்டுட்டு சாப்பாடு, துணிமணியோடு பள்ளிக்கூடத்திலே போய் படுத்துக்கிறணுமாம். ஒரு மணிக்குள்ள பஸ் வந்திரும். உடனே கிளம்பி அதிகாலை சூரிய உதயம் பார்க்க கன்னியாகுமரி போயிறணுமாம். பிறகு அங்கே எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு சுசீந்திரம் போய் விட்டு - திருவனந்தபுரம். அங்கே மிருகக்காட்சிசாலை, மீன் காட்சி மூசியம், கோவளம், பத்மநாபசாமி கோயில் எல்லாம் பார்க்கணும். கோயிலுக்குள்ளே சட்டை போடாமத்தான் போகணுமாம். சட்டை போடாட்டா மேலே இருக்கிற சொங்கும் சொறியும் வெளியே தெரியுமே என்று சோலை கவலைப்பட்டுக் கொண்டான். அதற்கென்ன உள்ளே போகாமல் இருந்துவிட்டுப் போகிறது என்று சமாதானமும் சொல்லிக் கொண்டான்.

சோலை இதுவரை கடல் பார்த்ததில்லை. அதை நினைக்கும் போதே கற்பனையிலேயே பிரமிப்பாக இருந்தது. அய்யாவிடம் நூறுவாட்டமாவது கேட்டிருப்பான். கையை விரித்து விரித்துக் காட்டி இவ்வளவு பெரிசு இருக்குமா இவ்வளவு பெரிசு இருக்குமா என்று.

அப்புறம் கேரளாவிலே மலையாளம் தானே பேசுவார்களாம். அங்கே யாரிடமாவது பேச வேண்டி வந்தால் என்ன செய்வதென்று யோசித்து பலமுறை மனசுக்குள் பலவிதமாக இங்கிலீஷில் பேசிப் பார்த்துக் கொண்டான். "வாட் இஸ்யுவர் நேம்?" "வாட் ஆர் யூ டூயிங்" "மை நேம் இஸ் எல். சோலையப்பன். சிக்ஸ்த் ஸ்டாண்டர்டு 'ஏ.' கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல் மேட்டுப்பட்டி. மை நேடிவ் ப்ளேஸ் இஸ் கே. சியந்தியாபுரம். இட் இஸ் எ ப்யூட்டிபுல் வில்லேஜ். மை பாதர் இஸ் ஏ ஒர்க்கர்"

இது மட்டுமல்லாமல் முருகேச அண்ணனிடம் கேட்டு விசாரித்து "வேர் இஸ் ஓட்டல்?" "வாட் ப்ரைஸ் இஸ் திஸ்" "எண்டபேரு சோலையப்பன்", என்பது மாதிரி சில புது விஷயங்களையும் மனசில் தயார் பண்ணிக் கொண்டான்.

அப்புறம் திடீரென்று - கொண்டு போக வேண்டிய சாமான்கள் எல்லாம் தயாராகிவிட்டதா என்று மனசில் சரி பார்க்க ஆரம்பித்துவிட்டான். பல்பொடி தாளில் மடித்து வைக்கணும். மறந்துவிடக்கூடாது. ஐயாவிடம் துண்டை வாங்கி துவைத்து விடணும் - நாளை. சோறு கட்டுவதற்கு இலை அய்யா வாங்கிட்டு வந்திருவார். கட்டு சோற்றை நினைத்தால் இப்பவே நாக்கில் எச்சில் ஊறி 'கிளுகிளுப்பாய்' இருந்தது.

காலையின் ஏறுவெயிலில் பள்ளிக்கூடத்திலிருந்து தன் ஊரை நோக்கி 'லொங்கு லொங்கு' என்று தலை தெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தான் சோலை. முதல் பீரியடுதான் முடிந்திருந்தது. வந்த உடனேயே 'கிளாஸ் டீச்சர்' சொல்லி விட்டார்.

"உல்லாசப் பயணத்துக்கு இன்னும் ரூவா குடுக்காதவனெல்லாம் எந்திரி. இன்னைக்கு மத்தியானம் ஒரு மணிக்குள் எல்லாம் ரூவாயை பி.கே.சார்வாகிட்ட குடுத்திறணும். அப்பிடிக் குடுக்காதவன் சாயந்திரம் டூர் கிளம்பையில் வர வேண்டியதில்லை"

ரூபாய் கொடுக்காத மற்ற ஏழெட்டுப் பையன்களைப் போல சோலையும் ஊரைப் பார்த்து ஓடிக் கொண்டிருந்தான். சோலை பத்து ரூபாய் ஏற்கனவே கொடுத்துவிட்டான். இன்னும் முப்பது ரூபாய் தரவேண்டும். ராத்திரி கிளம்புமுன்னே கொடுத்துவிடலாம் என்று அய்யா சொல்லியிருந்தார். வேர்க்க விறுவிறுக்க மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்து "யாத்தோவ்" என்று கத்தியபடி வீட்டுப்படி ஏறினான். வீடு நாராங்கி போட்டுப் பூட்டியிருந்தது. கதவை ஒரு எத்து எத்திவிட்டு தெருவில் இறங்கி ஓடினான். செல்லையாநாயக்கரின் ஓடைப் பிஞ்சைக்கு களைபெடுக்க அவள் போயிருப்பதாக முத்துப்பாட்டி சொன்னதும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான் ஓடைப் பிஞ்சைக்கு.

இவன் ஓடி வருவதைக் கண்டதும் ஆத்தாள் வேலையைவிட்டு எழுந்து எதிர்கொண்டு "என்னய்யா வந்துட்டே...."என்று கேட்டாள். ஆத்தாளைக் கண்டதும் முதலில் அவனுக்கு அழுகைதான் உடைத்துக்கொண்டு வந்தது. ஆத்தா அவனை இழுத்து ஆதரவாக அணைத்துக்கொண்டு "ஏன்யா...எதுக்குய்யா...அழுவுதே..." என்று கேட்டாள். அழுகையினூடே விக்கி, விக்கி மத்தியானத்துக்குள் ரூபாய் கொடுக்க வேண்டிய விஷயத்தைச் சொன்னான். ஆத்தாள் அவனை அணைத்தபடியே முதுகைத் தடவிக் கொடுத்து "சரி அதுக்காக அழுகாதய்யா...ராசால்ல. மத்தியானத்துக்குள்ள மொதலாளி நாய்க்கரிட்டேயிருந்து ரூவா வாங்கிட்டு வந்துருதேன்னு அய்யா சொல்லிட்டு போயிருக்காக...

அழுவாதேய்யா..." என்று அவனைத் தேற்றினாள்.

சற்றுநேரத்தில் அழுகையை அவன் நிறுத்திவிட்டாலும் "இப்பவே வந்து ரூவா வாங்கிக் கொடு" என்று அவளை அனத்த ஆரம்பித்துவிட்டான். அவளோ கொஞ்சம் கூட இது இல்லாமல் இவனை வரப்பு மேட்டில் இருத்திவிட்டு வேகமாய் களை எடுக்க ஆரம்பித்துவிட்டாள். தன் நிரையை வேகமாக முடித்துவிட்டு மத்தியானத்துக்குள்ளே மகனோடு கிளம்பினாள், மொதலாளி நாய்க்கர் வீட்டுக்கு. அங்கேதான் அய்யா கூலிக்கு நிற்கிறார்.

போன நேரத்தில் சோலையின் அய்யாவும் அங்கே இல்லை. நாய்க்கரும் இல்லை. நெல் அறைக்க வண்டியைப் போட்டு அவனை டவுனுக்கு அனுப்பியிருப்பதாகவும், ரூபாய் விஷயமெல்லாம் தனக்கொன்றும்தெரியாதென்றும் அதெல்லாம் நாயக்கரிடம்தான் கேட்க வேண்டுமென்றும் நாயக்கரம்மா

சொன்னபோது ஆத்தாளின் சேலையைப் பிடித்தபடி அவள் பின்னால் நின்று கொண்டிருந்த சோலை மறுபடியும் விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டான். அவன் அழுவதைப் பார்த்து இரக்கப்பட்டு நாயக்கரம்மா அவனுக்கு குடிப்பதற்கு ஒரு தம்ளர் மோர் கொடுத்தது.

வீடு திரும்பியதும் ஆத்தா தெரிந்த வீடுகளிலெல்லாம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தாள். அவ்வளவு பெரிய தொகையை அவ்ளால் எங்கிருந்து புரட்ட முடியும்? முடியவில்லை. வீட்டு வாசலில் உட்கார்ந்து உடைந்து உடைந்து சோலை ஏற்கனவே அழ ஆரம்பித்திருந்தான். ஆத்தாளும் தவியாய்த் தவித்தாள். இருந்தாலும் அவ்ளால் என்ன செய்துவிட முடியும்?

நேரம் ஆக ஆக அழுகை பெரிதாகி ராத்திரி உல்லாசப் பயணம் போகிற பயல்களெல்லாம் "டேய் சோலை வல்லியாடா..." என்று கேட்டுப் போனதும் வெடித்துக் கதறினான். கண்ணெல்லாம் வீங்கி தொண்டை கட்டிப் போன பிறகும்கூட அவன் விசும்பிக் கொண்டுதான் இருந்தான்.

ஆத்தாளும் முதலில் பலவாறு அவனைத் தேற்றிப் பார்த்து விட்டு "என் ராசா அழுவாதய்யா இங்கபாரு-கண்ணெல்லாம் வீங்கிப் போச்சு பாரு-வேண்டாமய்யா நம்ம விசாகத் திருழாக்கு திருச்செந்தூர் போவமில்ல என்ன அழுவாதே..." என்று தேற்றிப் பார்த்து முடியாமல் கொஞ்ச நேரத்தில் அவளுக்கும் அழுகை உடைத்துக் கொண்டு வந்தது. அவனை இழுத்து தன் வயிற்றோடு கட்டிக் கொண்டு விசும்பி விசும்பி சத்தமில்லாமல் அழுதாள். சாப்பிடாமலே ரெண்டுபேரும் ராத்திரி படுத்துவிட்டனர். தூங்குகிற அவனை அணைத்தபடி அவள் அழுது கொண்டிருந்தாள்.

ராத்திரி வீட்டுக்கு வராமல் நாயக்கமார் தெருமடத்திலேயே அய்யா படுத்துக் கொண்டான். எல்லா வேலையும் முடித்த பிறகு சாயந்திரமாக "இப்ப இவ்வளவுதான் இருக்கப்பா இத வச்சி சமாளிச்சிக்க-இன்னும் ரெண்டு நாள் கழிச்சி பாப்பம்" என்று மொதலாளி நாய்க்கர் அவனிடம் ஒரு பத்து ரூபாயை மட்டும் கொடுத்திருந்தார். பழைய பாக்கியையும் அவர் ஞாபகப்படுத்தினார். இத்தோடு வருகிற வழியிலேயே சோலை அழுது புரளுவதைக் கேள்விப்பட்டு வீட்டுக்குப் போகாமல் அப்படியே திரும்பி அவனும் பலபேரிடம் கேட்டுப் பார்த்தான். எல்லாரும் கையை விரித்தார்கள் அல்லது "நாளைத் தாரேன்" என்றார்கள்.

எப்படி சோலையின் முகத்தைப் போய்ப் பார்ப்பது என்று மனம் வெதும்பி மடத்தில் முடங்கிக் கிடந்தான். வயிறு பசித்தது. இருந்தாலும் சோலையின் முகத்தைப் பார்க்கிற தைரியத்தையும் பார்த்ததும் சமாதானமாகச் சொல்வதற்கு ஒரு வார்த்தையையும் கண்டுபிடித்த பிறகுதான் அவன் வீட்டுக்குத் திரும்ப முடியும்.

# பண்டச்சரக்குகளாக மாணவர்களை உருவாக்கும் டியூட்டரிகள் : டியூட்டரிகள் பிரசவிக்கும் குட்டி முதலாளிகளும்

இன்று மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் படித்தவர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என சொல்லிக்கொண்டுதான் பதிவு நாடாவாக பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவுகளை மறு உற்பத்திக்காக வீடுகளிலும், நகரங்களிலும் மூலதனம் இல்லாத டியூட்டரி கடைகள், விரல்விட்டு எண்ண முடியாத அளவில் பல திறக்கப்பட்டு இளைய தலைமுறையினரை வெறுமனே பதிவு நாடாவாக உற்பத்தி செய்ய பல டியூட்டரிகள் எத்தணித்து தங்கி கொண்டிருப்பது ஆபத்தானது என்பதோடு, வரவிருக்கும் 21ம் நூற்றாண்டில் இவர்கள் அதி நவீன முதலாளிகளாக திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இவ் டியூட்டரி முதலாளிகள் மாணவர்களை எவ் ஈர்ப்பு விசையை பயன்படுத்தி இழுக்கின்றார்கள்? மாணவர்கள் எவ்வாறு உற்பத்தியின் பின் உந்தப்படுகின்றார்கள் எனின், 'நான்' என்னும் ஆணவத்தோடு 'நான்' படித்த விடயத்தை மாணவர்களுக்கு உட்புகுத்தவும். முதலாளியின் செயல், பழக்கத்தை பின்பற்றவும் பாடசாலையில் படிப்பிக்கின்ற ஆசிரியர் படித்துவிட்டு வீட்டில் இருக்கின்ற மூலதனம் இல்லாத கடைகளாக டியூட்டரிகள் திறக்கின்றார்கள். இந்நிலையில் தேவையான ஏற்றுமதியற்ற பண்டச்சரக்கான மாணவர்களை,

- அதி நவீன விளம்பரத்தின் மூலமும்
- டியூட்டரிகடைக்கு போகாவிட்டால் படித்து முதலாளியாக இயலாது
- டியூட்டரி இல்லையே சமூக சக்திகள் இல்லை
- பாடசாலையில் கற்பிக்க நேரம் போதாது
- முதல் தர சித்திக்கு என் டியூட்டரி கடைதான்
- காதலருக்கு புகலரண்கள்
- முதல் பாதி பாடபரப்பு பாடசாலையிலும், மீதி டியூட்டரியிலும் கற்பிக்கப்படும்

இதற்கெல்லாம் பாடசாலை சூழல் போதாது என்று பல எண்ணங்களை மாணவர்கள் மனதில் நிறுத்தி விடுகின்றார்கள். சிந்திப்பவர்களும் சிரமமானவர்களும், தப்பித்து கொள்ளும் அதேநேரம் ஏனையவர்கள் டியூட்டரி வாசல் படியினை நாட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு டியூட்டரிகளுக்குப் போகின்ற மாணவர்கள் பெரும்பாலும் க.பொ.த (சா/த), (உ/த) மாணவர்களாகவே, கட்டிளம்பருவத்தை உடைய வயதெல்லை கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்களிலும் பொருளாதார சிக்கல் கொண்ட நடுத்தர, கீழ்த்தர வர்க்கத்திலுள்ளவர்களே டியூட்டரிகளில் நிற்கின்றார்கள் இவர்களின் வாழ்வியல் பொருளாதாரத்தை கருத்தில் கொள்ளாமல் மாதகட்டணம் 100 ரூபா முதல் 200 ரூபா வரை புத்தகத்தில் இருக்க, இருக்கின்ற விடயத்தை பகுதி பகுதியாக தட்டச்சு செய்து கொடுத்தால் ஒரு விலையும், கணணியில் பதிவு செய்தால் மற்றொரு விலையிலும் விற்று தமது முதலாளிதுவத்தினை காட்டும் அதேநேரம் மாதாமாதம் கருத்தரங்குகளும் நடத்தி எண்ணற்ற அளவில் எண்ணம்மில்லாது சுரண்டிவிடுகின்றார்கள்.

இன்று மலையக வாழ் தோட்ட தொழிலாளிக்கு ரூபா 95/= சம்பளமாக கிடைக்கின்றது. இவ் 95 ரூபாவை தோட்ட நிர்வாக, கடை முதலாளிகள் சுரண்டுவதை விட சமூக அந்தஸ்து கொண்ட டியூட்டரி கடை முதலாளிகள் ஈவு இரக்கமின்றி சுரண்டுகின்ற தன்மை மேலோங்கி நிற்கின்றது.

பெற்றோரின் நாட் கூலியை சுரண்டினார்கள். இதைவிடவும் அவர்களின் பெண் பிள்ளைகளை பாலியல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்படைய செய்து விடுகின்றார்கள். தான் அனுபவித்தவளை அதே வயதை ஒத்தவனுக்கு ஜோடி சேர்ப்பது, டியூட்டரி முதலாளிக்கு கைவந்த கலையாகும்.

இதன் மூலம் மாணவர்கள் கல்வியின் பேரில் களியாடுவதற்காக டியூட்டரி வாசலை வளம் வருகின்றார்கள். இதுபோல ஆண்டு 10 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான பாடபுத்தகங்களில் சிதருண்டு கிடைக்கின்ற நாலடியார், குற்றாள குரவஞ்சி, கணித பாடத்திலும் கூறப்படுகின்ற விடயத்தை தீர்க்கமான முறையில் சிந்திக்கவிடாது கட்டிளம் பருவத்தை கொண்ட மாணவர்களிடையே காதல் உணர்வலைகளை கற்பிக்க முற்படுகின்றார்கள். இதன் பேரில், கற்றுக்கொண்டு போக வந்த கட்டிளம் பருவமாணவர்கள் காதல் டிரெயினில் திசை திருப்பப்பட்டு கல்யாண தண்டவாளத்தில் இணைந்து விட, அவர்களின் வாழ்வியல் பூச்சிய நிலையை அடையச் செய்துவிடுகின்றது.

மலையகத்திலுள்ள அதிபர்களும், படித்தவன் என்ற பெயரை மட்டும்பயன்படுத்தும் ஆசிரியர்களும் படித்த இளம் பதிவு நாடாக்களும் சற்றேனும் மலையக வாழ் சமூகத்தை, வாழ்நிலையை, பொருளாதாரத்தை உற்று நோக்குவார்களா? என்று பார்க்கின்ற போது, அது பின்தங்கி கிடக்கின்ற நவீன அடிமை வாழ் சமூகத்தை சுரண்ட வந்துள்ள அதி நவீன முதலாளிகள் என்பதனை ஒரு யதார்த்த போக்குடைய மனிதனால் உணரமுடியும்.

டியூட்டரிகள் செல்லாதவர்களின் நிலை சற்று உயர்வானது இவர்களின் கடும் முயற்சி, வீட்டு சூழலின் பால் கொண்ட அக்கறை, பொருளாதாரத்தை எதிர்தாலும் சமூகத்தை விட்டுவிட ஓர் தூர பார்வை கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழத்தில் நுழைந்து சட்டத்துவத்தினையும், முகாமைத்துவத்தினையும் செய்து வெளியேறுவதை காணலாம்.

இவ் அதி நவீன குட்டி முதலாளிகள் உற்பத்தி செய்யும் போக்கு மலையகத்தில் மட்டுமன்றி, ஏனைய முதுநிலை பிரதேசத்திலும் ஆசிரியரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டியூட்டரிகளை நாடி மாணவர்கள் போகின்றார்கள் என்றால் ஆசிரியர்கள் ஏன்? பாடசாலையில் கற்பிக்கின்றார்கள்? டியூட்டரிகளில் செய்கின்ற சிறுவீத நல்ல செயலை பாடசாலையில் செய்தால் பாடசாலையில் வீதம் 100 வீத்தில் நிற்குந்தானே என்ற கேள்வியை எழுப்பும் பொழுதுதான் பதிவு செய்த நாடாவினை விற்பனை செய்வதற்காகவே இன்றைய இளைய தலைமுறை மாணவர்களை சுரண்டி புதிய முதலாளிகளாக டியூட்டரிகளில் உற்பத்தி செய்கின்றார்கள். இது நீடித்தால் வரப்போகும் காலத்தில் குட்டி முதலாளிகள் கூடி விடுவார்கள் இதற்கு ஈடு கொடுக்காத பெற்றோர்களையும், மாணவர்களையும் காப்பாற்ற முடியும்.

பண்டச்சரக்கு கொன்றாக மாற்றப்பட்டுள்ளமை இன்றைய மாணவன் உலகவங்கி, பண்ணாட்டு வங்கி, நிதி நிறுவனம் போன்றவை ஏகாபத்திய அமெரிக்க எஜமானர்கள் நலனுக்காக உருவாக்கப்படுகின்றான். இந்த பண்பாட்டு பேர்களும் பண்டங்களுக்காக, வேலைகளுக்காக, உணவுக்காக, கல்விக்காக போட்டியிடும் மாணவனை மனிதாக பயிற்றி வாழவைப்பது இன்றைய ஆசிரியர்களின் வரலாற்று பணியாகின்றது.

*"புதிய கல்விக்கொள்கையாவது ...... டியூட்டரிகளுக்கு வேட்டாகுமா?"*

*மு. அஸாத்*

அறிவு என்னும் செங்குத்தான பாதையில்
களைப்புக்கஞ்சாமல் சோர்வடையாமல்
ஏறுகிறவன் மட்டுமே, அறிவு என்னும்
சிகரத்தை அடையமுடியும்

**-கார்ல் மார்க்ஸ்-**